# பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்

**உலக தலைமையகம்**, செயின்ட் தாமஸ் சமூகம், குட்டப்புழா அஞ்சல்,
திருவல்லா - 689103 கேரளா, இந்தியா..

# மேய்ப்பனின் கடிதம்

**ஏப்ரல்-மே 2025**

எனக்கு அன்பான மேய்ப்பர்களுக்கும் பரிசுத்த திருச்சபையின் அனைத்து விசுவாசிகளுக்கும்

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உங்களோடு இருப்பதாக. ✠. ஆமென்.

நமது  திருச்சபை  வரலாற்றின் மிக முக்கியமான தருணங்களில் ஒன்றின் மீது உங்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்க்க நான் இன்று உங்கள் அனைவரிடமும் உரையாற்றுகிறேன். நமது  முதலாம்  மெட்ரொபாலிட்டன் தந்தை அதனாசியஸ் யோகன்,  அவர்களின் நினைவுச்சின்னமாக, மே 8, 2025, அவர் நித்திய இளைப்பாறுதலில் பிரவேசித்து ஓராண்டு நிறைவடைகிறது.

அவர் இவ்வுலகை விட்டுப் புறப்பட்டதை ஒரு சபையாக நாம் புரிந்துகொள்வது நிச்சயமாகவே கடினம், ஆனாலும் நாம் அவரது நினைவை உயிர்ப்புடன் வைத்திருக்கும் பாக்கியம் பெற்றிருக்கிறோம். அவரது வாழ்க்கையை பின்பற்ற உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அவர் போதித்த போதனைகளின்படி, அவர் தொடங்கிய பணியைத் அடுத்த தலைமுறைக்கு எடுத்து  செல்லவேண்டும். இந்த பொறுப்பு ஒரு சுமை அல்ல, ஆனால் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு பெரிய மகிழ்ச்சியும் மரியாதையும் அளிக்கிறது - அதை நாம் ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் தழுவ வேண்டும்.

பரிசுத்த திருச்சபை நமது இளைபாறும் மெட்ரொபாலிட்டன் தந்தை அத்தநேசியஸின் முதல் ஆண்டு  நினைவு தினத்தைத் அனுசரிக்க  தயாராகி வருகிறது. நாம் அனைவரும் நமது இருதயங்களையும் மனதையும் இதை பரிசுத்தமாய்  கடைபிடிப்பதில் ஈடுபடுத்த வேண்டும். ஒரு திருச்சபையாக, ஒன்றிணைந்து ஜெபம் செய்யவும், அவரது  வாழ்க்கைக்காக சர்வ வல்ல தேவனுக்கு நன்றி செலுத்தவும் வாருங்கள். தயவு செய்து இந்த நினைவு தினத்தை செயலற்ற தினமாக உங்கள் நான்கு சுவர்களுக்குள் நிறுத்திக் கொள்ளாதீர்கள். மாறாக, நம்மை  விட்டு  கடந்து  சென்ற  மெட்ரொபாலிட்டன்  தந்தை  வாழ்ந்து போதித்ததுப்  போலவே ஒரு படி மேலே: அன்பு மற்றும் இரக்கம்  தேவைப்படும் உலகிற்கு சேவை செய்வோம்.

உங்கள் ஆவிக்குரிய பிதாவாக, இந்த குறிப்பிட்ட நாளில் மட்டுமல்ல, ஒவ்வொரு நாளும் நாம் அவற்றின்படி வாழ, நம்மை விட்டு கடந்து சென்ற மெட்ரொபொலிட்டன் தந்தையின் வாழ்க்கை முறையின் முக்கிய அம்சங்களுக்கு உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்

1. **இரக்கம் மற்றும் தொண்டு செயல்கள்**: நம்மை விட்டு கடந்து சென்ற தந்தையின் இருதயம் ஏழைகள், நோயுற்றவர்கள் மற்றும் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களுக்காக உடைந்து, கிறிஸ்து செய்ததைப் போலவே அவர்களை நேசிக்க அவர் தன்னை அர்ப்பணித்தார். அவரது நினைவாக, நீங்களும் தேவைப்படுபவர்களுக்கு - தொண்டு கொடுப்பதன் மூலமோ, நோயுற்றவர்களைப் சந்திப்பதன் மூலமோ அல்லது உங்கள் சமுதாயத்தில் கருணையின் எளிய செயல்களின் மூலமோ அணுகுமாறு கேட்டுக்கொள்கிறேன்

2. **தினசரி ஜெபம் மற்றும் நடைமுறைப்படுத்தல்:** இடைவிடாமல் ஜெபிக்கவும், இயேசுவின் ஜெபத்தை நம் அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக மாற்றவும் ஒரு திருச்சபையாக, நம்மை விட்டு கடந்து சென்ற தந்தை நமக்கு ஊக்குவித்திருக்கிறார். தனிப்பட்ட பக்தி, குடும்ப ஜெபங்கள், தெய்வீக வழிபாட்டில் கலந்துகொள்வது, இயேசுவின் ஜெபத்தை உண்மையுடன் செய்வது ஆகியவற்றால் ஆழமான ஜெப வாழ்க்கைக்கு ஒப்புக்கொடுப்போம்.

3. **திருச்சபைக்கும் சமுதாயத்திற்கும் சேவை:** நம்மை விட்டு கடந்து சென்ற தந்தை பரிசுத்த சபையை முழு இருதயத்தோடும் நேசித்து அதைக் கட்டியெழுப்ப அயராது சேவை செய்தார். அவர் தொடர்ந்து வெளியிட்ட ஒரு கூற்று, "திருச்சபையையே சிந்தியுங்கள்" என்பதாகும். நமது திருச்சபையின் வளர்ச்சிக்காகவும், அதன் மூலம் நமது சமுதாயத்தின் நலனுக்காகவும் நமது நேரத்தையும் திறமைகளையும் அர்ப்பணித்து அவரது பணியைத் தொடர்வோம். சிறிய மற்றும் பெரிய வழிகளில் சேவை செய்ய நமக்கு எண்ணற்ற வாய்ப்புகள் உள்ளன - திருச்சபை நிகழ்வுகளில் உதவுதல், திருச்சபையின் சேவையை ஆதரித்தல் மற்றும் சுவிசேஷ ஊழியங்களில் உதவலாம்.

4. **எதிர்கால சந்ததியினருக்காக விசுவாசத்தைப் பாதுகாத்தல்:** நம்மை விட்டு கடந்து சென்ற தந்தை, குழந்தைகளை நேசித்தார், அவர்களுக்கு எப்போதும் முன்னுரிமை கொடுத்தார். ஞாயிறு பள்ளி, பிலிவர்ஸ் யூத், பெண்கள் ஐக்கியம், வினாவிடைப் வகுப்பு, ஜெபம் மற்றும் முன்மாதிரியான வாழ்க்கை வாழ்வதன் மூலம் பரிசுத்த திருச்சபையின் வாழ்க்கையை அடுத்த தலைமுறைக்கு வளங்க உறுதியேற்போம். நம்மை விட்டு கடந்து சென்ற தந்தையை ஆதரித்து, நமது திருச்சபையை வடிவமைத்த விசுவாசம், நமது அடுத்த தலைமுறையை தொடர்ந்து நிலைநிறுத்தி வடிவமைக்கும் என்பதை உறுதி செய்வோம்.

எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் வெறும் கேட்பவர்களாக மட்டுமல்ல, அதற்கு மேலாக அதன்படி செய்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாம் முழு மனதுடன் நம்மை விட்டு கடந்து சென்ற

திருச்சபையின் முதலாம் மெட்ரொபொலிட்டன் தந்தை அத்தனாசியஸ் யோகன் அவர்களின் வாழ்க்கை முறையைத் தழுவுவோம்.

நாம் இயேசுவின் கரங்களாகவும், வாயாகவும், கால்களாகவும் இருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நினைவில் கொண்டிருப்போம் - மற்றவர்களுக்கு சேவை செய்யவும், கிறிஸ்துவின் சாயலை பரதிபலிக்கவும், இது நம்மில் முத்திரையிடப்பட்டுள்ளது. தொடர்ந்து கிறிஸ்துவைப் போல இருப்போம்.

அவரது நினைவு என்றென்றும் நிலைத்திருக்கட்டும்!

பரிசுத்த திரித்துவ தேவன்; பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் தம்முடைய அளவற்ற கிருபையினாலும் இரக்கங்களினாலும் நம்மை வழிநடத்தி, அனைத்து பரிசுத்தவான்கள், மற்றும் பரிசுத்த திருதாய் தியோடோகோஸ் ஆகியோரின் பரிந்துரைகள் நமக்கு பாதுகாப்பாக தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக, இப்பொழுதும் எப்பொழுதும் இருப்பதாக. ✠ஆமென்.

**அன்புடனும் ஜெபத்துடனும்,**

மோரான் மோர் சாமுவேல் தியோபிலஸ்
மெட்ரோபாலிட்டன்

**தேதி:** 15 ஏப்ரல் 2025
**இடம்:** உலக தலைமை செயலகம்